## இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

தமிழ்

வகுப்பு - நான்கு - ____________ நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. ‘நிலவுலகம்’ - இச்சொல்லின் பொருள் ____________

அ) பூவுலகம் ஆ) விண்ணுலகம் இ) ஊர் ஈ) நாடு

2. புத்திக்கூர்மையாக செயல்பட்டது யார்?

அ) சிங்கம் ஆ) முயல் இ) பென்குயின் ஈ) யானை

3. ‘வெகுளாமை’ - இச்சொல்லின் பொருள் ____________

அ) அன்பு இல்லாமை ஆ) பொறாமை கொள்ளாமை
இ) சினம் கொள்ளாமை ஈ) பொறுமை இல்லாமை

4. ‘வியனுலகம்’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

அ) வியன் + உலகம் ஆ) வியல் + உலகம்
இ) விய + உலகம் ஈ) வியன் + னுலகம்

5. ‘மக்கட்பேறு’ இச்சொல்லின் பொருள் ____________

அ) குழந்தைச்செல்வம் ஆ) மக்கள் செல்வம்
இ) குடிமக்கள் ஈ) மன்னனின் மகன்

6. பொறை என்பதன் பொருள் ____________

அ) முழுமை ஆ) வளமை இ) பொறுமை ஈ) பெருமை

7. ‘பார்த்ததங்கே’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

அ) பார்த்த + அங்கே ஆ) பார்த்து + அங்கே
இ) பார்த்தது + எங்கே ஈ) பார்த்தது + அங்கே

8. ‘விந்தை’ - இச்சொல்லின் பொருளைக் கண்டுபிடி ____________

அ) மகிழ்ச்சி ஆ) கவலை இ) அழுகை ஈ) ஆச்சர்யம்

9. போற்றி ஒழுகப்படும் பண்பு ____________

அ) சினம் ஆ) பொறையுடைமை
இ) அடக்கமில்லாமை ஈ) அறிவில்லாமை

10. ‘பிறகென்ன’ - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

அ) பிற+கென்ன ஆ) பிறகெ + என்ன இ) பிறகு + என்ன ஈ) பிறர்க்கு + என்ன

**II. பிரித்து எழுதுக.** 5 × 1 = 5

11. முடிவெடுத்தால்
12. கனைப்பொலி
13. மக்களெல்லாம்
14. நாயொன்று
15. வெறுப்படைவார்கள்

**III. இன எழுத்துகளால் நிரப்புக.** 5 × 1 = 5

16. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ______________ (அக்கரை / அக்கறை) யுடன் பாடம் கற்பித்தனர்.
17. நாம் ஏழைகளிடம் ______________ (இரக்கம் / இறக்கம்) காட்ட வேண்டும்.
18. நான் ______________ (தீபாவலி / தீபாவளி) க்கு பட்டாசு வாங்கினேன்.
19. பந்து பார்வையாளரை நோக்கிப் ______________ (பரந்தது /பறந்தது)
20. வாசலைக் கூட்டி தண்ணீர் தெளித்து ______________ (கோலம் இடு / கோளம் இடு)

**IV. சொற்களிலுள்ள பிழைகளை திருத்தி எழுதுக.** 5 × 1 = 5

21. காவளர்கள்
22. அறுமையான கதை
23. வால்க்கை நெரிகள்
24. வனங்குகிறார்கள்
25. நீன்டநால் பனி

**V. மனப்பாடப்பாடல்.** 2 + 2 = 4

26. 'அறிவு' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.
27. 'யாகாவார்' எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**VI. கடிதம் வரைக.** 1 × 5 = 5

28. மருத்துவ ஓய்வு தொடர்பாக நீண்ட நாள் விடுப்பு வேண்டி தலைமை ஆசிரியருக்கு விண்ணப்ப கடிதம் வரைக.

**VII. வினாத்தொடரை முழுமைப்படுத்துக.** 6 × 1 = 6

(என்ன, யார், எத்தனை, யாருடைய, எது, எத்தனை?

29. உன் கை விரல்கள் ______________?
30. ஓவியத்தை வரைந்தது ______________?
31. இது ______________ சட்டை?
32. உனக்கு பிடித்த ஊர் ______________?
33. உன் சகோதரர்கள் ______________ பேர் ?
34. நீ ______________ சாப்பிட்டாய் ?

**VIII. சொல் எழுதுக. சொற்றொடர் அமைக்க.** 5 × 2 = 10

35.

| | | |
|---|---|---|
| பா | ல் | - ________________ |
| | ணை | - ________________ |

36.

| | | |
|---|---|---|
| வீ | டு | - ________________ |
| | ணை | - ________________ |

37.

| | | |
|---|---|---|
| தே | ள் | - ________________ |
| | ன் | - ________________ |

38.

| | | |
|---|---|---|
| ம | லை | - ________________ |
| | ழை | - ________________ |

39.

| | | |
|---|---|---|
| வ | லை | - ________________ |
| | டை | - ________________ |

**IX. வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

40. இரத்தினபுரி மன்னர் தம் குடிமக்களை எவ்வாறு நடத்தினார்?
41. நாவைக் காக்காவிடில் ஏற்படும் துன்பம் என்ன?
42. ஊர்வலத்திற்குச் சென்ற யானை என்னவாயிற்று?
43. குதிரை ஏன் நாய்க்கு உதவி செய்ய நினைத்தது?
44. பாட்டி வைத்தியம் என்றால் என்ன?
45. பனிமலைக்கு எதற்காக விலங்குகள் சென்றன?
46. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?